**SafeArrival**
Student Absence Management System
**ocdsb.ca/SafeArrival**

OTTAWA-CARLETON
DISTRICT SCHOOL BOARD



**SafeArrival என்றால் என்ன?**
SafeArrival என்பது மாணவர்களின் வரவின்மைகளை நிர்வகிப்பதற்கான ஒரு புதிய முறைமையாகும். சமுகமளிக்காமைகள் பற்றி குடும்பத்தினர் முற்கூட்டியே ஒரு தொலைபேசிச் செயலி, இணையத்தளம் அல்லது கட்டணமற்ற ஒரு தொலைபேசி அழைப்பைப் பயன்படுத்தித் அறிவிக்க முடியும். இந்த விருப்பத்தெரிவுகள் வாரத்தில் 7 நாட்களும் நாளொன்றில் 24 மணித்தியாலங்களும் கிடைக்கும்.

**நாம் ஏன் SafeArrival ஐப் பயன்படுத்துகிறோம்?**

- இது மாணவரின் பாதுகாப்பை மேம்படுத்துகிறது.
- இது மாணவர் சமுகமளிக்காமை பற்றி எளிதாக அறிவிக்க குடும்பத்தினருக்கு உதவுகிறது.
- விளக்கப்படாத மாணவர் சமுகமளிக்காமைகளுக்கு விரைவாகப் பதிலளிப்பதில் பாடசாலைகளுக்கு உதவுகிறது.
- குடும்பத்தினருக்கு அறிவிப்புகளை விரைவாக அனுப்புகிறது.

**SafeArrival ஐ எவ்வாறு பயன்படுத்துவது?**
மாணவர் சமுகமளிக்காமையை நீங்கள் மூன்று வழிகளில் அறிவிக்கலாம்:
முக்கியம்: செயலிக்காக/இணையத்தளத்துக்காக உங்களுடைய கணக்கை உருவாக்கும் போது, உங்களுடைய மாணவரின் பாடசாலையின் பதிவில் உள்ள மின்னஞ்சல் முகவரியைப் பயன்படுத்தவும்.

**1)** செயலி: உங்கள் கையடக்கச் சாதனத்தில் SchoolMessenger செயலியை நிறுவவும் அல்லது OCDSB செயலி ஊடாக அதை அணுகவும். பதிவுசெய்வதற்கு செயலியைத் திறந்து, *Sign Up* என்பதைத் தெரிவு செய்யவும். பதிவுசெய்த பிறகு, மெனுவிலிருந்து *Attendance* ஐயும், பின்னர் *Report an Absence* என்பதையும் தெரிவு செய்து அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**2)** இணையத்தளம்: go.schoolmessenger.ca இற்குச் செல்லவும். உங்களுடைய கணக்கை உருவாக்குவதற்கு *Sign Up* என்பதைத் தெரிவு செய்யவும். பதிவு செய்ததும், மெனுவிலிருந்து *Attendance* ஐயும், பின்னர் *Report an Absence* என்பதையும் தெரிவு செய்து அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**3)** கட்டணமற்ற தொலைபேசி: தானியங்கு தொலைபேசி முறைமையைப் பயன்படுத்தி சமுகமளிக்காமையை அறிவிப்பதற்கு, 1-833-202-1417 என்ற கட்டணமற்ற தொலைபேசி எண்ணை அழைத்து, அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**SafeArrival**
Student Absence Management System
ocdsb.ca/SafeArrival

OTTAWA-CARLETON DISTRICT SCHOOL BOARD



பயனுள்ள தகவல்கள்:

- மாணவர் தாமதமாகி வரப் போகிறார் என்றால், Full Day என்பதைத் தெரிவு செய்து, Late என்பதைத் தெரிவு செய்யவும். தாமதமாக வரும் அனைத்து மாணவர்களும் பாடசாலை அலுவலகம் ஊடாக வந்து உள்நுழையும் வரை முழு நாளும் சமுகமளிக்காதவர்களாகக் குறிக்கப்படுவர்.
- தொடக்க மற்றும் இடைநிலைப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில், அதே நாளில் சமுகமளிக்காமை குறித்து பாடசாலை தொடங்கும் நேரத்துக்குப் பிறகு 30 நிமிடங்கள் வரை மட்டுமே அறிவிக்க முடியும். அதன் பிறகு, தயவுசெய்து பாடசாலைக்கு நேரடியாக அழைப்பை ஏற்படுத்தவும்.
- மேல்நிலைப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் அதே நாள் சமுகமளிக்காமையை மாலை 6:00 மணி வரை அறிவிக்கலாம்.
- பாடசாலை நாட்காட்டியில் உள்ள எந்தவொரு பாடசாலை நாளுக்காகவும் சமுகமளிக்காமைகள் குறித்து முற்கூட்டியே அறிவிக்கலாம்.
- மாணவர் சமுகமளிக்கவில்லை என்று குறிக்கப்பட்டு சமுகமளிக்காமை பற்றி முற்கூட்டியே அறிவித்திருந்தால், நீங்கள் சமுகமளிக்காமையை உறுதிசெய்து விளக்கும் வரை எமது SchoolMessenger முறைமை உங்களைப் பலமுறை தொடர்பு கொள்ள முயற்சிக்கும். குறித்துரைக்கப்பட்ட நபரைத் தொடர்புகொள்ள முடியாவிட்டால், பாடசாலைப் பணியாளர்கள் தொடர் நடவடிக்கை எடுப்பார்கள். இந்த அறிவிப்புகளைத் தவிர்ப்பதற்காக, உங்களுடைய பிள்ளையின் சமுகமளிக்காமையை முற்கூட்டியே அறிவிக்கவும்.
- சரியான பெற்றோர் / பாதுகாவலருக்கு தகவல்கள் அனுப்பப்படுவதற்கு ஏதுவாக, உங்கள் பாடசாலை அலுவலகத்தில் எப்போதும், உங்களின் தற்போதைய தொடர்பு விவரங்கள் இருப்பதை உறுதிசெய்து கொள்ளவும்.